Dinamani,dt:9.4.26,pg.no.4

# அவினாசிலிங்கம் கல்வி நிறுவனத்தில் ராஜம்மாள் பி.தேவதாஸ் நினைவுச் சொற்பொழிவு



கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற ராஜம்மாள் பி.தேவதாஸின் 24-ஆம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவில் பங்கேற்றோர்.

**கோவை, ஏப். 8:** கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தில் முனைவர் ராஜம்மாள் பி.தேவதாஸின் 24-ஆம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவு நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, நிறுவன வேந்தர் டி.எஸ்.கே.மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். இதில் மத்திய அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி மன்றத்தின் தலைமை இயக்குநர் என்.கலைச்செல்விக்கு 'நினைவுச் சொற்பொழிவு விருது' வழங்கப்பட்டது.

விருதுபெற்று கலைச்செல்வி பேசுகையில், 'ஆராய்ச்சி மாணவர்கள் கழிவுப் பொருள்களிலிருந்து பயனுள்ளவற்றை உருவாக்கி சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். விண்வெளி வீரர்களுக்கான உணவு வடிவமைப்பில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த வேண்டும்' என்றார்.

கல்வி அறக்கட்டளை துணை அறங்காவலர் கௌரி ராமகிருஷ்ணன் அறிமுக உரையாற்றினார். முன்னதாக, வரும் அக்டோபரில் நடைபெறவுள்ள இந்திய ஊட்டச்சத்து சங்க மாநாடு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. பதிவாளர் எஸ்.கௌசல்யா வரவேற்றார். மனையியல் புல முதன்மையர் அம்சமணி நன்றி கூறினார். இதில் மாணவிகளின் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.